## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (2)

# பண்பாடும் வைராக்கியமும்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

லியோன்கா ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தான். அன்று நடைபெற்ற சம்பவங் களை நினைத்த பொழுது அவனுக்குச் சங்கடமாக இருந்தது. அவன் லெனினிடம் குறும்பாகப் பேசியதோடு. நீச்சலிலும் அவரைத் தோற்கடித்து விட்டான். அடுத்த தடவை அவரைப் பார்க்கும் போது அதற்குப் பரிகாரம் செய்வதென்று முடிவு செய்து கொண்டான்.

மறுநாள் அவன் ஆற்றங்கரைக்குப் போனான். மாலை வரையிலும் அங்கேயே இருந்தான். ஆனால் லெனின் அங்கே வர வில்லை. இப்படியே ஒரு வாரத்துக்கு மேல் அவன் தினமும் ஆற்றங்கரைக்குப் போனான். நல்லவேளையாகப் பத்தாவது நாளன்று லெனினை மறுபடியும் அங்கே பார்த்தான்.

"என்ன, தண்ணீர் எப்படி இருக்கிறது?" என்று விளதீமிர் இலியீச் கேட்டார்.

"வெதுவெதுப்பாக இருக்கிறது. நல்ல வெதுவெதுப்பு. நீங்கள் நம்பக் கூட மாட்டீர்கள், விளதீமிர் இலியீச்".

"அப்படியானால் தண்ணீர் உண்மையிலேயே வெதுவெதுப்பாகத்தான் இருக்க வேண்டும்" என்றார் லெனின்.

எப்படியாவது லெனினைத் தண்ணீரில் குதிக்கச் செய்ய வேண்டுமென்று லியோன்கா விரும்பினான்.

"தண்ணீரில் நீந்துவது சுகமாக இருக்கிறது. இறகு மெத்தையில் படுத்திருப்பது போல இருக்கிறது" என்றான் லியோன்கா.

லெனினும் லியோன்காவும் மறுபடியும் நீச்சல் போட்டியில் ஈடுபடுவதென்று முடிவு செய்தார்கள். ஒரு குச்சியைத் தண்ணீரில் தூக்கி எறிந்தார்கள். உடனே இருவரும் தண்ணீரில் குதித்தார்கள். லியோன்கா இந்தச் சந்தர்ப்பத்துக்காகத் தான் காத்துக்கொண்டிருந்தான்.

லியோன்கா நீந்தியது மாதிரித் தோன்றினாலும் அவன் உண்மையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அது மட்டுமல்ல. தன்னுடைய தந்திரம் வெளியே தெரியாமல் மறைத்துக் கொண்டான். ரொம்பவும் சிரமப்பட்டு மூச்சு விடுவது போல நடித்தான்.

ஆனால் லெனின் இதை கவனித்து விட்டார். லியோன்கா பக்கம் திரும்பினார்.

"என்ன தந்திரம் செய்கிறாய்?"

"விளதீமிர் இலியீச்! ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?" என்று லியோன்கா மறுப்புத் தெரிவித்தான். அவன் லெனினிடம் பொய் சொன்னான்! அதிலும் சிறிதும் வெட்கப் படாமல் பொய் சொன்னான். அவன் பொய் சொல்கிறான் என்பதை லெனின் புரிந்து கொண்டார். அவனுக்குச் சவால் விடுவதென்று தீர்மானித்தார்.

விளதீமிர் இலியீச் தன்னுடைய வேகத்தைக் குறைத்தார். அவர் திரும்பிப் பார்த்தார் - லியோன்காவும் வேகத்தை குறைத்து விட்டான். லெனின் மேலும் வேகத்தைக் குறைத்தார். ஆனால் அப்பொழுதும் லியோன்கா, அவரை முந்த வில்லை. அவர்கள் அந்தக் குச்சிக்கு அருகில் வர வர அவர்களுடைய நீச்சல் வேகமும் குறைந்தது. இப்பொழுது அவர்கள் நீச்சலை நிறுத்தி விட்டு மிதந்து கொண்டிருந்தார்கள்.

லெனின் லியோன்கா பக்கம் திரும்பினார். "இப்பொழுது என்னிடம் மாட்டிக் கொண்டாய்" என்றார்.

தன்னுடைய தந்திரம் அம்பலமாகி விட்டது என்பதைப் புரிந்து கொண்ட லியோன்கா, அவமானத்தால் தலையைக் குனிந்தான்.

"லியோன்கா! இது சரியில்லை" என்றார் லெனின். அப்பொழுது அவர்கள் கரைக்குப் பக்கமாக இருந்தார்கள். "நாம் மறுபடியும் போட்டியை ஆரம்பிக்க வேண்டியதுதான்".

மறுபடியும் அவர்கள் குச்சியைத் தண்ணீரில் விட்டெறிந்தார்கள்; மறுபடியும் இருவரும் தண்ணீருக்குள் குதித்தார்கள். தன்னுடைய மோசடி பலிக்காதென்று லியோன்காவுக்குப் புரிந்தது. எனவே இப்பொழுது அவன் தன்னுடைய முழு பலத்தோடும் நீந்தினான். அவன் என்ன பாடுபட்டும் லெனினைத் தொட்டு நீந்த முடியவில்லை. அவரை முந்திவிட வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தான். கைகளை மாற்றி மாற்றி வேகமாகப் போட்டான். ஆனால் பலனில்லை. இப்பொழுது அவனுக்கு உண்மையாகவே மூச்சு வாங்கியது. அவனால் லெனினைத் தொடர்ந்து நீந்த முடியவில்லை.

லியோன்கா போட்டியில் தோற்று முக வாட்டத்தோடு வீட்டுக்குத் திரும்பினான்.

ஆனால் விளதீமிர் இலியீச் மகிழ்ச்சி பொங்க விடுதிக்குத் திரும்பினார்.

"நம்முடைய அணி பலமிழந்து விட்டதாக நினைக்க வேண்டியதில்லை என்பதை இது காட்டுகிறது. நம்மிடம் பலமிருக்கிறது...."

அவர் போகும் வழியில் இப்படி சிந்தித்தார். "இன்றைக்குப் பெரிய வெற்றியே. இனி மேல் நான் ஓய்வெடுக்க வேண்டியதில்லை என்று தெரிகிறது. பழைய வெடிமருந்துக் கிடங்குதான். ஆனால் இன்னும் வெடிமருந்து இருக்கிறது."

பாவம்! லியோன்கா. பரிதாபமாக வீட்டுக்குத் திரும்பினான். அவன் லெனினுக்கு முதல் இடம் கொடுப்பதற்குத் தான் விரும்பினான். அவன் விரும்பிய படியே நடந்தது. ஆனால்..... போட்டி வளர்ச்சியடைந்த பொழுது இப்படி முடிவு ஏற்படும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை."

உடன்பிறப்பே, இந்த நிகழ்வு எதை உணர்த்துகிறது? அல்லது எந்தப் பாடத்தை அறிவுறுத்துகிறது? தோல்வியைத் தாங்கிப் பழகிடாத ஒரு வைராக்கிய உள்ளத்தையும் - தோற்றவர், துவண்டுவிடாமல் இருக்க வேண்டுமே என்ற ஓர் நல்ல எண்ணத்தையும் புலப்படுத்துகிறது! லெனின் வாழ்க்கையில் சுட்டிக்காட்டப் படும் இந்த நிகழ்வு, இரு விதமான இயல்பும் இளைஞர்களுக்கும் வாய்த்திட வேண்டும் என்று எண்ணுகிறோம் அல்லவா? அந்த இனிய இயல்பு லியோன்காவுக்கு அமைந்துள்ளது போல நமது இளைஞர்களுக்கும் அமைய வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அப்போதுதானே அகவையில் மூத்தோர் பாராட்டுவர்! புகழ்வர்!

**அன்புள்ள**

**மு.க.**

(முரசொலி - 8.11.2007)

## சிவகங்கை மறை மாவட்ட மூன்றாவது ஆயராக லூர்து ஆனந்தம் பதவி ஏற்பு!

### அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் - பீட்டர் அல்போன்ஸ் பங்கேற்பு!

*சிவகங்கை. நவ.23-*

சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்ட கத்தோலிக்க கிறித்தவ திருச்சபை அடக்கியதாக சிவகங்கை மறை மாவட்டம் உள்ளது. இந்த மறை மாவட்டத்தின் 3 வது ஆயராக முனைவர் லூர்து ஆனந்தம்பொறுப்பேற்கும் விழா வருகிற 26 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4,00 மணிக்கு புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. புதிய ஆயர் திருப்பலி நிகழ்ச்சி திருத்தந்தை யரின் இந்திய தூதர் பேராயர் லியோ போல்டோஜிரல்லி, முன்னிலையில் மதுரை உயர்மறை மாவட்ட பேராயர் அந்தோணி பாப்பு சாமி இணை ஆயர்கள் தூத்துக்குடி ஆயர் ஸ்டீபன் முன்னாள் சிவகங்கை மறை மாவட்ட ஆயர் சூசை மாணிக்கம் சென்னை மயிலை உயர் மறைமாவட்ட பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி ஆகியோர் நடத்தி வைக்கிறார்கள். அதனை தொடர்ந்து புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதிய ஆயர் லூர்து ஆனந்தம் அவர்களை வரவேற்று வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது. இந்த வாழ்த்து அரங்கத்தில் புதிய ஆயரை வாழ்த்தி கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், மாநில சிறுபான்மை ஆணைய தலைவர் எஸ். பீட்டர்அல்போன்ஸ், எஸ். இனிகோஇருதய ராஜ் எம்.எல்.ஏ. பாண்டிச்சேரி ஆயர் முனைவர் பிரான்சிஸ் ஸ்கலிஸ்ட், சென்னை பிஷப் முனைவர் வி. தேவசகாயம், மனித நேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா மாவட்ட ஆட்சியர்கள் திருமதி ஆஷா அஜித், விஷ்ணுப்பிரியன், ராமநாதபுரம் சரக டி.ஐ.ஜி. எம்.துரை, மாவட்ட காவல் கண்காணிப்பா ளர்கள் பி.கே.அரவிந்த், தங்கதுரை ஆகியோர் பேசுகிறார்கள். இந்த நிகழ்ச்சியில் 25க்கும் மேற்பட்ட பிஷப்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட பங்குதந்தையர்கள் மற்றும் பல்வேறு திருச்சபை யினர் கலந்து கொள்கிறார்கள். புதிதாக மூன்றாவது ஆயராக பொறுப்பேற்கும் லூர்து ஆனந்தம் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா திரு வரங்கத்தில் பிறந்தவர் . இவரது தந்தை லூர்து. தாயார் திருமதி அருளம்மாள் இவருடன் 3 சகோதரர்களும், 2மூத்த சகோதரிகளும் உள்ளார்கள். இவர் திருவரங்க தில் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி படித்துவிட்டு பின்னர் கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியில் பி.யூ.சி.படித்தார் .கல்லூரி படிப்பினை கருமாத்தூர் புனித அருள் ஆனந்தம் கல்லூரியில் படித்தார். புதிய மறை மாவட்ட ஆயரின் பதவி ஏற்பு நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஆயர் வரவேற்பு குழு சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சூசைமாணிக்கம், பொருளாளர் சந்தியாகு, பங்குத் தந்தை ஜேசுராஜா, ஒருங்கிணைப்பாளர் ஜிடி. அந்தோணி மற்றும் விழா குழுவினர் செய்து வருகிறார்கள் .1985ல் சிவகங்கை மறைமாவட்டம் உருவானது. முதல் மறைமாவட்ட ஆயராக எஸ்.எட்வர்டு. பிரான்சிஸ், 2வது ஆயராக சூசை மாணிக்கம் ஆகியோர் பொறுப்பில் இருந்தார்கள். 3வது ஆயராக முனைவர் லூர்து ஆனந்தம் பொறுப்பு ஏற்கிறார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு

## திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி பாக முகவர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் அறிவிப்பு

*சென்னை, நவ. 23 -*

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிக் கழக பாக முகவர்கள் கூட்டம் இன்று (நாள்: 23.11.2023) மாலை 5.00 மணியளவில் 72 அ வட்டம் வ.உ.சி நகர் முதல் தெரு திருமண மண்டபம் ஆடு தொட்டி அருகில் நடைபெறுகிறது.

திரு.வி.க.நகர் வடக்கு பகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம். பகுதி அவைத் தலைவர் தில்லை. கதிரவன் தலைமையில் நடைபெறுகின்றது.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை (ம) பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்..

இதில் மேயர் பிரியா ராஜன், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி தொகுதி பொறுப்பாளர் டாக்டர். யாழினி பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்துக் கொண்டு சிறப்பிக்கின்றனர். இதில் பாகநிலை முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் செ.தமிழ் வேந்தன் தெரிவித்துள்ளார்.




வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு99, புரசைவாக்கம், ராஜா அண்ணாமலை சாலையில் மாநகராட்சி பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து துணை மேயர் மு.மகேஷ்குமார் நேற்று (22.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

### நவம்பர் 23 (2012)



பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே, தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, 1955ஆம் ஆண்டு முதல் பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, 1956ஆம் ஆண்டு பூலாவரி கிளைக் கழகச் செயலாளராக, வட்டக் கழக பிரதிநிதியாக, மாவட்டக் கழகப் பிரதிநிதியாக, பின்னர் பொதுக்குழு உறுப்பினராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்று, தொடர்ந்து 38 ஆண்டுகள் சேலம் மாவட்டக் கழகச் செயலாளராக தொய்வின்றி பணியாற்றி வந்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் – சட்டநகல் எரிப்புப் போராட்டம் ஆகியவற்றில் தலைமை ஏற்று சிறைவாசமும் – நெருக்கடிநிலை காலத்தில் 'மிசா' கைதியாக 14 மாத சிறைவாசமும் அனுபவித்தவர்.

பூலாவரி ஊராட்சிமன்றத் தலைவர், கிராம கூட்டுறவு நாணய சங்கத் தலைவர், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர், சேலம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், 1962 தொடங்கி ஆறு முறை சட்டப்பேரவை உறுப்பினர், சட்டமன்ற மேலவை உறுப்பினர், ஒரு முறை ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், மூன்று முறை வேளாண்மைத் துறை அமைச்சர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

"சேலத்துச் சிங்கமாம், என்னுடைய தளபதி ஒருவரை இழந்த துக்கம் என்னை வாட்டி வதைக்கிறது. எனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. அவ்வளவுதான் சொல்ல முடியும்!" என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**